[2020 பிப்ரவரி 20

676 முழுநேரக் கடைகள், 1,748 பகுதிநேரக் கடைகள், ஆக 2,424 கடைகளை இந்த அரசு திறந்திருக்கிறது. இதுதவிர, 46 நகரும் கடைகள், மக்கள் எளிதில் அணுக முடியாத பகுதிகளில் வாழ்கின்ற மக்களுக்கும், போக்குவரத்து வசதி இல்லாத பகுதியில் வாழ்கின்ற மக்களுக்கும், மலைக் கிராமங்களில் வாழ்கின்ற மக்களுக்கு எல்லாம், இந்த அரசு அவர்கள் இல்லத்திற்கு அருகில் போய் கொடுத்துக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தருமபுரி மாவட்டத்தில் குறிப்பிட்டுக் கேட்டிருக்கிறார்கள். அது, சட்டவிதிகளுக்குட்பட்டு வரும்பட்சத்தில் நிச்சயமாக, உடனடியாக, துறைரீதியாக ஆய்வு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தெந்தப் பகுதிகளில் எவ்வளவு கார்டுகள் இருக்கின்றன என்று எழுதிக் கொடுத்தீர்களேயானால் அரசு உறுதியாக நடவடிக்கை எடுப்பதற்கு முன்வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 58, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

58—

புதிய மின்மாற்றி

***34863—டாக்டர் ஆர்.டி. அரசு:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செய்யூர் தொகுதி, சித்தாமூர் ஒன்றியம், சித்தாற்காடு கிராமத்திற்கு புதிய மின்மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் தொகுதியான செய்யூர் தொகுதியில், சித்தாற்காடு கிராமத்திற்கு புதிய மின்மாற்றி அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே, ஆறு, 100 கே.வி.ஏ. திறன் கொண்ட மின்மாற்றியும், இரண்டு,

2020 பிப்ரவரி 20]

63 கே.வி.ஏ. திறன் கொண்ட மின்மாற்றியும் அங்கு இருக்கின்றன. அது, மொத்த மின்பளுவில் 50 சதவிகிதம்தான் இருக்கின்றது. புதிய மின்மாற்றி அமைக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மின் அழுத்தம் குறைவாக இருக்கிறது என்று சொன்னால், அது ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு அவர்கள்.*

டாக்டர் ஆர்.டி. அரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓய்வறியா உழைப்பால் ஒப்புயர்வற்ற தலைவர், தமிழினத்தின் காவலன், எங்கள் தலைவரை வணங்குகிறேன். செய்யூர் தொகுதியில் துணை மின் நிலையம் உள்ளது. அந்த துணை மின் நிலையத்திலிருந்து நல்லூர், இரும்பேடு, சாலையூர், ஜமின்புதூர், அமைந்தகரை, ஆற்காடு, நலங்களத்தூர், பாலையூர், சித்தாற்காடு, தண்ணீர்பந்தல் ஆகிய பகுதிகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. 5,000–க்கும் மேற்பட்ட வீடுகளுக்கும், 200–க்கும் மேற்பட்ட மின்மோட்டார்களுக்கும் பயன்படுத்துவதால் அந்தப் பகுதியில் மின்னழுத்த குறைபாடு உள்ளது. அதேபோல சேம்புலிபுரம், இந்தலூர் ஆகிய பகுதிகளில் துணை மின் நிலையம் விரைந்து அமைத்திடவும், ஜி.டி. குப்பம் இருளர் பகுதியில் மின் இணைப்பு இதுவரை வழங்கப்படாதிருப்பதால் வழங்கவும், தட்டாம்பட்டு, இரும்புலிச்சேரி, எடையாத்தூர் ஆகிய பகுதிகளிலுள்ள மின் கம்பங்கள் 60 ஆண்டுகள் பழமை வாய்ந்த மின்கம்பிகளாக இருப்பதால், அவற்றை மாற்றித் தரவும் வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், சித்தாமூர், சூனாம்பேடு பகுதிகளில் கிட்டத்தட்ட 15 கிலோ மீட்டர் தூரத்திற்கு எந்த ஒரு மின் இணைப்பும் வழங்கப்படாமல் இருக்கிறது. வீரபோகம், பெரியகளக்காடி ஆகிய பகுதிகளிலும், செய்யூர் தொகுதியில் பெரும்பாலான இடங்களிலும் ஆர்.சி.சி. கம்பங்கள் மிகவும் பழுதடைந்து, அடிக்கடி மின் இணைப்பு துண்டிக்கப்படுவதால், கம்பங்களைச் சீரமைத்துத் தருமாறு வேண்டுகிறேன். இவையனைத்தையும் விரைந்து முடித்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது, ஆற்காடு மின்மாற்றி வழியாக மின்சாரம் வந்துகொண்டிருக்கிறது. நான் ஏற்கெனவே சொன்னதைப்போல 8 மின்மாற்றிகள் இருக்கின்றன. அந்த 8 மின்மாற்றிகள்மூலம் உங்கள் கிராமத்தில் மொத்தம் 561 மின் இணைப்புகள் மட்டும்தான் இருக்கின்றன. 5,000 மின் இணைப்புகள் கிடையாது. 561 மின் இணைப்புகள் மட்டும்தான் இருக்கின்றன.*

முற்பகல் 10–25

ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, conductors, *மின் கம்பிகளெல்லாம் பழுதடைந்திருக்கின்றன. ஏனென்றால், 11–11½ கி.மீ. நீளத்திற்கு அந்த மின் கம்பிகள் செல்வதால் பழுதடைந்திருக்கின்றன. அங்கு ஏற்கெனவே மின் திறன் 2.9 கே.வி. ஆக இருப்பதை, விரைவில் 4.09 கே.வி. ஆக மாற்றித் தருவதற்குண்டான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றோம்.*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 60 ஆண்டு காலமான மின் கம்பங்களை மாற்ற வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். இந்த ஆண்டு மட்டும் கிட்டத்தட்ட இதுவரை 65,000–க்கும் மேற்பட்ட பழுதடைந்த மின் கம்பங்கள் மாற்றித் தரப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட இடத்தில் ஆய்வு செய்து, அவ்வாறு இருப்பின் உடனடியாக அந்த மின் கம்பங்கள் மாற்றித் தரப்படும். மின் கம்பிகளைப் பொறுத்தவரை, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, அவற்றை மாற்றுவதற்குண்டான நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம். அங்கு தேவைப்படும் மின் பளு 50 சதவீதம் மட்டும்தான் இருக்கிறது. நீளம் அதிகமாக இருக்கின்ற காரணத்தால் மின் கம்பிகள் பழுதடைந்துள்ள காரணத்தினால் மின் பளு குறைவாக இருக்கலாம். அதை மாற்றினால் மின் பளு சரியாகிவிடும். ஆக, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன பணிகளை உடனே தொடங்குவதற்குண்டான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு அவர்கள்.*

டாக்டர் ஆர்.டி. அரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கிராமத்தைச் சேர்ந்த தங்கப்பிரகாசம் என்ற ஓர்*

2020 பிப்ரவரி 20]

இளைஞர் 27–10–2018 அன்று சென்னை, வள்ளுவர்கோட்டத்தில் மின் பணியில் ஈடுபட்டிருந்தபோது, மின் கசிவின் காரணமாக தனது வலது கை மணிக்கட்டு வரை இழந்துவிட்டார். அவருக்கு இதுவரையில் எந்தவொரு நிவாரணமோ அல்லது ஒரு தற்காலிகப் பணியோகூட இந்த அரசு வழங்காதது மிகவும் வருத்தத்தை அளிக்கிறது.

“எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.”

*இது திருக்குறள். இந்தக் குறளுக்கேற்ப, இந்த அரசு ஆட்சியிலே மூன்றாண்டு காலமாக அமர்ந்துகொண்டிருப்பதற்கு முக்கியக் காரணமாக விளங்குவது ** உள்ளடக்கிய தொகுதி செய்யூர் தொகுதி.* (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதையெல்லாம் எதற்குச் *சொல்கிறீர்கள்? நீங்கள் கேள்வி நேரத்தில் கேள்விதானே கேட்க* வேண்டும். அவை எதற்கு? அந்த வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு)

டாக்டர் ஆர்.டி. அரசு: *நான் கேள்வியைத்தான் கேட்கிறேன். ** உள்ளடக்கிய. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏன் அதையே திரும்பத் திரும்ப பேசுகிறீர்கள்? (குறுக்கீடு) அவைக் குறிப்பிலிருந்து நீக்கிய வார்த்தைகளை ஏன் மறுபடியும் record செய்கிறீர்கள்?

டாக்டர் ஆர்.டி. அரசு: *செய்யூர் தொகுதி எந்தவொரு அடிப்படை வசதியும் இல்லாத அடித்தட்டு மக்களைக் கொண்டிருக்கின்ற ஒரு தொகுதி. அந்தத் தொகுதியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியோ, தொழிற்கூடங்களோ, தொழிற்சாலைகளோ இல்லை. எந்த ஒரு வசதியும் இல்லை. ஒரே ஒரு உப்பளத் தொழிற்சாலை இருக்கிறது. அதில் பணிபுரிகின்ற பணியாளர்களுக்கு குறைந்தபட்ச கூலிகூட வழங்கப்படாத ஒரு நிலை இருக்கிறது. ஆகவே, இந்த அரசு ** தீர்க்கின்ற வகையில், 4,000 மெகா வாட் அனல் மின் நிலையத்தை அங்கு அமைப்பதாக அறிவித்து, அது கிடப்பில் போடப்பட்டு, இதுவரை* paper level–*ல்தான்*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

இருந்துகொண்டிருக்கிறது. இதையாவது முடித்து, ** தீர்த்துக்கொள்ள இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு, இன்று உங்களுக்கு என்னவாயிற்று? நீங்கள் கேள்வி நேரத்தில் கேள்வியைத்தானே கேட்க வேண்டும்? தேவையில்லாததையெல்லாம் ஏன் பேசுகிறீர்கள்? அவர் ** என்று சொன்ன வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முதலில் கேள்வி கேட்டார்கள். அங்கு மின் பளு குறைவாக இருக்கின்றது; அதனால் மின்மாற்றியை மாற்ற வேண்டுமென்று கேட்டார்கள். ஏற்கெனவே அங்கிருக்கின்ற மின்மாற்றியில் 50 சதவிகித மின் பளுதான் இருக்கிறது. Conductors அதாவது மின் கம்பிகள் பழுதடைந்திருக்கின்றன. ஆகவே, அதை மாற்றித் தருகிறோம் என்று சொன்னேன். அதற்கு அடுத்ததாக, அவரது தொகுதிக்கு என்ன தேவையோ அதைக் கேட்டிருக்கலாம். தேவையில்லாமல் பேசி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அவற்றை நீக்கிவிட்ட காரணத்தினால் நான் அந்த விஷயத்திற்குள் செல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினர் தனது தொகுதிக்கு என்ன தேவையோ, அதைப் பற்றிப் பேசினால், அவற்றைப் பெற வாய்ப்புகள் இருக்கின்றன. உங்கள் தொகுதிக்குத் தேவையானவற்றைப் பற்றிக் கேட்பதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. பொதுவாக, சட்டமன்ற உறுப்பினர்கள் யாராக இருந்தாலும், அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றிக்கொண்டு வருகிறோம். அன்றையதினம்கூட திரு. அரவிந்த் ரமேஷ் அவர்கள் பேசுகின்றபோது, அவருடைய முழு speech–லும் அவர் அவருடைய தொகுதிக்கானவற்றை மட்டும்தான் கேட்டிருந்தார். அவர் நிதிநிலை அறிக்கையில்கூட பேசவில்லை. அந்த அளவிற்கு சட்டமன்ற உறுப்பினர்கள் அவரவர் தொகுதிக்கு என்ன தேவையோ அதைக் கேட்கிறார்கள். அதைப்போல நீங்களும் கேட்கின்றீர்கள். நாங்கள் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்றெல்லாம் பார்ப்பதில்லை. மக்களைத்தான் பார்க்கின்றோம். அதனால், தேவையானவற்றை நாங்கள் செய்துகொண்டுதான் இருக்கின்றோம்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2020 பிப்ரவரி 20]

4,000 மெகா வாட் மின் திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருக்கு இதைப் பற்றி நன்றாகத் தெரியும். அந்தப் பகுதியில் இருக்கின்ற மக்கள் அங்கே இந்தத் திட்டத்தைக் கொண்டுவரக் கூடாது என்று போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். கிட்டத்தட்ட 1,060 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டிருக்கின்றது. நிலம் கையகப்படுத்தப்பட்டதற்குப் பின்னர், போராட்டம் நடத்திய காரணத்தினால், மத்திய அரசு அதற்கு என்ன செய்வதென்று பார்ப்பதற்காக அதை pending*–ல் வைத்திருக்கிறது. இருந்தாலும், இந்த அரசு எதிர்கால மின் தேவையைக் கருத்தில் கொண்டு, அந்தத் திட்டத்தைக் கொண்டுவர வேண்டும் என்று தொடர்ந்து கேட்டுக்கொண்டிருக்கிறது. விரைவில் அந்தத் திட்டத்தைக் கொண்டு வருவதற்காக மத்திய அரசுடன் இணைந்து பேசி, ஒரு சுமூகத் தீர்வு எட்டப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அதேபோல, இருளர் கிராமத்தில் மின்சார வசதியே இல்லை என்று சொன்னார்கள். இதுகுறித்து இதுவரை எங்கள் கவனத்திற்கு வரவில்லை. உடனடியாக, அதிகாரிகளை அங்கு அனுப்பி, ஆய்வு செய்து, இருளர் கிராமத்திற்குத் தேவையான மின்சார வசதியைச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள். (குறுக்கீடு) இருங்கள். வாய்ப்புத் தருகிறேன். உட்காருங்கள்.*

முற்பகல் 10–30

திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் உயிரினும் மேலான தலைவர் கலைஞர் அவர்களையும், தலைவர் தளபதி அவர்களையும் வணங்குகிறேன். தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் தொகுதியில், மேலக்காவேரி கிராமம், ஏலாகாரவழிநடப்பு மற்றும் கல்லூர் வட்டம், வட்டியூர் கிராமங்களில் இரண்டு 33/11 கே.வி. துணை மின் நிலையங்கள் அமைத்திட கடந்த 2012 முதல் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. இந்த மாமன்றத்தில் 14–7–2014 மற்றும் 5–12–2014 ஆகிய தேதிகளில் 2,016 மகாமகப் பணிகள் முடித்துத் தரப்படுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதி அளித்தார்கள். தொகுதி மக்கள் சார்பில் அதை வரவேற்கிறேன்.*

[2020 பிப்ரவரி 20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதியாக இருங்கள். கேள்வி கேட்கிறார்கள் அல்லவா?

திரு. க. அன்பழகன்: மேலும், துறைசார்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டது. வகை மாற்றம் செய்ய வேண்டியும், விலை நிர்ணயம் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தால் தனியார் நிலம் விற்கப்பட்டு விட்டது. மந்தைவெளிப் புறம்போக்கு நிலத்தை வகை மாற்றம் செய்ய இயலாது என்று வருவாய்த் துறை சொன்னதினால் அதுவும் தடைப்பட்டு விட்டது. தொடர்ந்து இம்மாமன்றத்தில் நான் வலியுறுத்திப் பேசும்போது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கு மின்னழுத்தம் குறைவாக இருப்பதால் அவசியம் துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்று நீங்கள் கூறினீர்கள். தற்போது சோழபுரம் பேரூராட்சி, வேளாண்மேடு பகுதியில் தனியாருக்குச் சொந்தமான சுமார் ஒன்றரை ஏக்கர் பரப்பளவில் ஆர்.எஸ். நெ.21/15–ல் இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. அங்குள்ள மிராசுதார்கள் 24 பேர்களில், 13 மிராசுதார்கள் மனமுவந்து ஒப்புதல் அளித்துவிட்டனர். உள்ளூர் பிரமுகர்களும், துறை அதிகாரிகளும் பேசிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்பணிகளை விரைவுபடுத்தி சோழபுரம் மற்றும் மேலக்காவேரி பகுதிகளில் 33/11 கே.வி. துணை மின் நிலையம் அமைத்திட ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக டெல்டா மாவட்டங்களில் மின்பளு குறைவாக இருக்கிறது என்பதை நானே ஒத்துக்கொண்டிருக்கிறேன். அதற்கான காரணத்தை ஏற்கெனவேகூட நான் சொல்லியிருக்கின்றேன். மாநகரங்களில்கூட இடம் வாங்க முடிகிறது. டெல்டா மாவட்டங்களில் நாம் இடம் பெறுவது கடினமாக இருக்கின்றது. இடம் கிடைத்தால் துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம் என்று சொல்லியிருக்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போது ஒரு இடத்தை சொல்லியிருக்கின்றார். நாளைய தினம் நான் திருவாரூர் வருகின்றேன். வருகின்ற வழியில் அங்கே மின்சார வாரியத்தினுடைய CE அவர்களை வரச் சொல்லி, உடனடியாக ஆய்வு செய்து, இடம் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறார்களென்று

2020 பிப்ரவரி 20]

சொன்னால், அதிகாரிகளிடத்திலே கலந்துபேசி, அந்த இடத்தை உடனடியாகக் கையகப்படுத்தி, அங்கு துணை மின் நிலையம் அமைப்பற்குண்டான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன் அவர்கள்.*

திரு. ப. ரங்கநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2019 ஆம் ஆண்டு இந்தத் துறையின் மூலமாக நீங்கள் பதிலுரை சொல்கிறபோதெல்லாம் சொல்கிற கருத்து, மத்திய அரசு திட்டங்களான கிராமப்புற மின்மயமாக்கல் திட்டம், உதய் மின் திட்டம் இவற்றின் மூலமாக பல்வேறு சூழ்நிலைகளில் நிறைய அளவில் நிதி வருவதாகவும், அவற்றை முழுமையாகப் பயன்படுத்தாததால் வாரியம் பணிகளை குறித்த காலத்தில் முடிக்காமல் இருப்பதாகவும், அதனால் அந்த நிதி மீண்டும் மத்திய அரசுக்கே சென்றுள்ளதாகவும் ஒரு தகவல் வாரியத்தின் மூலமாக வந்துள்ளது. அது உண்மையா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற திட்டங்களை எல்லாம் மத்திய அரசு கொடுக்கின்றது. கொடுக்கின்ற திட்டங்களுக்கு நாங்கள் ஏதாவது பணிகளைச் செய்கின்றபோது அங்கு விவசாயிகள், இடம் கொடுப்பதிலே பல போராட்டங்கள் நடைபெறுகின்ற காரணத்தினால் காலதாமதமாகி விடுகின்றது. நிதி ஒன்றும் திரும்பப் போகவில்லை. அவர்கள் கொடுக்கின்ற அந்த மானியத்தை நீங்களே ஏற்றுக்கொள்ள வேண்டும்.மத்திய அரசினுடைய பங்கீடு வருகின்றது. அந்தக் குறித்த காலத்திற்குள் அதைக் கொடுக்கவில்லையென்று சொன்னால், மாநில அரசே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றுதான் சொல்லியிருக்கிறார்களேயொழிய, நிதி திரும்பி போவது கிடையாது. ஆனால், குறித்த காலத்திற்குள் முடித்தால் அவர்கள் கொடுக்கின்ற அந்தப் பங்குத் தொகை நமக்கு மானியமாகக் கிடைக்கும். காலதாமதமாகின்றபோது அவர்கள் அதை முழுமையாக மாநில அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்.*

நாங்கள் காலதாமதத்திற்கு என்ன காரணம் என்பதை எல்லாம் விளக்கி இருக்கின்றோம். மத்திய அரசின் பங்கீட்டை மானியமாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கின்றோம். கேட்டு வாங்கி விடுவோம், எந்த நிதியும் திரும்பிப் போகவில்லை, அதை மட்டும் நீங்கள் புரிந்துகொள்ளுங்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 59, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரபிரபா, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

59—

மின்சார தகன மேடை

***49125—திருமதி மு. சந்திரபிரபா:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் மின்சார தகன மேடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் மதுரை சாலை மயானத்தில் எரிவாயு தகன மேடை அமைக்க தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரபிரபா அவர்கள்.*